பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

03 09 2025 7 15

புதன்கிழமை காலை

## தலைப்புச் செய்திகள்

1. சரக்கு மற்றும் சேவை வரி கவுன்சில் கூட்டம், மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தலைமையில், புதுதில்லியில் இன்று தொடங்குகிறது.

2. நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட ஆஃப்கனிஸ்தானுக்கு இந்தியா 21 டன் நிவாரணப் பொருட்களை அனுப்பி வைத்துள்ளது.

3. சிங்கப்பூர் பிரதமர் திரு. Lawrence Wong, மூன்று நாள் பயணமாக புதுதில்லி வந்துள்ளார்.

4. இரண்டு தொகுதிகளில் வாக்காளர் அடையாள அட்டை வைத்திருப்பது குறித்து விளக்கம் அளிக்குமாறு காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் திரு.பவன் கேராவுக்கு, தேர்தல் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

5. ப்ரோ கபடி லீக் போட்டியில் தில்லி மற்றும் ஜெய்ப்பூர் அணிகள் வெற்றி பெற்றுள்ளன.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

சரக்கு மற்றும் சேவை வரி கவுன்சிலின் 56வது கூட்டம், மத்திய நிதியமைச்சர் திருமதி.நிர்மலா சீதாராமன் தலைமையில், புதுதில்லியில் இன்று தொடங்குகிறது.

இரண்டு நாட்கள் நடைபெறும் இக்கூட்டத்தில், அனைத்து மாநில நிதியமைச்சர்களும் கலந்து கொண்டு, ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள் குறித்து விவாதிக்க உள்ளனர்.

பிரதமர் திரு.நரேந்திரமோடி சுதந்திர தின உரையில் குறிப்பிட்டது போன்று, வரி விகிதங்களைக் குறைத்து, சாமான்ய மக்கள், விவசாயிகள் மற்றும்

சிறு,குறு,நடுத்தரத் தொழில் துறையினருக்கு பல்வேறு சலுகைகள் அளிப்பது குறித்து, இக்கூட்டத்தில் முடிவு எடுக்கப்படும் எனத் தெரிகிறது.

சரக்கு மற்றும் சேவை வரி, எளிமையான, நிலையான மற்றும் வெளிப்படையானதாக மாற்றியமைக்கப்படும் என்று மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட ஆஃப்கனிஸ்தானுக்கு இந்தியா சார்பில் 21 டன் நிவாரணப் பொருட்களை அனுப்பி வைத்துள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தியில் அத்தியாவசிய மருந்துப் பொருட்கள், கையடக்க தண்ணீர் சுத்திகரிப்பு சாதனங்கள், படுக்கை விரிப்புகள், போர்வை, ஜெனரேட்டர், சமையல் பாத்திரங்கள், ORS நீர்க்கரைசல் உள்ளிட்ட பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக கூறியுள்ளார்.

ஆஃப்கன் நிலைமையை இந்தியா தொடர்ந்து கண்காணித்து வருவதாகவும், தேவைக்கேற்ப மனிதாபிமான அடிப்படையில் கூடுதல் உதவிப் பொருட்கள் அனுப்பி வைக்கப்படும் என்றும் திரு. ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

இந்தியாவை, 2070-ம் ஆண்டுக்குள் கரியமில வாயு வெளியேற்றம் இல்லாத நாடாக மாற்ற, பிரதமர் திரு.நரேந்திர மோடி இலக்கு நிர்ணயித்துள்ளதாக, மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு.நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில், மாநாடு ஒன்றில் பேசிய அவர், பருவநிலை மாற்றமும், புவி வெப்பமயமாதலும், வருங்கால சந்ததியினருக்கு பெரும் அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ளதாக கூறினார்.

எந்தவொரு நாடு அல்லது சமுதாயத்திற்கும், நெறிமுறைகள், பொருளாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் மிகவும் முக்கியமானது என்றும் திரு.நிதின் கட்கரி குறிப்பிட்டார்.

<<<<>>>>

சிங்கப்பூர் பிரதமர் திரு. Lawrence Wong, மூன்று நாள் பயணமாக புதுதில்லி வந்துள்ளார்.

மத்திய நிதித்துறை இணையமைச்சர் திரு.பங்கஜ் சௌத்ரி, விமான நிலையத்தில் அவரை வரவேற்றார்.

பின்னர் சிங்கப்பூர் பிரதமரை மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

வர்த்தகம், முதலீடு, நிதித் தொழில்நுட்பம், திறன் மேம்பாடு, சுகாதார சேவைகள் மற்றும் போக்குவரத்து இணைப்பு வசதி உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து இந்த சந்திப்பின்போது விரிவாக விவாதிக்கப்பட்டதாக வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், பிரதமர் திரு.நரேந்திர மோடியை, சிங்கப்பூர் பிரதமர் நாளை சந்தித்துப் பேச இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து குடியரசுத்தலைவர் திருமதி.திரௌபதி முர்முவையும் அவர் சந்திக்க உள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இந்தியா-சிங்கப்பூர் இடையே தூதரக உறவு ஏற்பட்டு 60 ஆண்டுகள் நிறைவடையும் நிலையில், சிங்கப்பூர் பிரதமரின் வருகை, இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த இரு நாடுகளும் உறுதிபூண்டுள்ளதாக வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

**<<<<>>>>**

நாட்டின் வேளாண் மற்றும் உணவுப் பொருட்கள் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கான BHARATI என்ற புதிய திட்டத்தை மத்திய வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தொடங்கி வைத்தார்.

வேளாண் மற்றும் உணவு சார்ந்த 100 புத்தொழில் நிறுவனங்களுக்கு நிதியுதவி அளிப்பதுடன் 2 ஆயிரத்து 30ஆம் ஆண்டுக்குள் இத்துறையில் 50 பில்லியன் டாலர் அளவுக்கு ஏற்றுமதியை அதிகரிப்பதே இந்தப் புதிய திட்டத்தின் நோக்கமாகும்.

சுயசார்பு இந்தியா மற்றும் புத்தொழில் இந்தியா இயக்கங்களின்படி ஏற்றுமதியை விரைவுபடுத்தி புதிய கண்டுபிடிப்புகளை மேற்கொள்வதன் மூலம் வேளாண் மற்றும் உணவுப் பொருள் வர்த்தகத்தில் இந்தியாவின் நிலையை

வலுப்படுத்தும் நோக்கில் வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருட்கள் அபிவிருத்தி ஆணையமான APEDA இந்தப் புதிய முயற்சியை மேற்கொண்டுள்ளது.

<<<<>>>>

காங்கிரஸ் மற்றும் ராஷ்ட்ரிய ஜனதா தள கட்சிப் பொதுக்கூட்டங்களில் பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தாயாரை அவமதித்திருப்பதற்கு மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், பிரதமரின் தாயாருக்கு எதிரான விமர்சனம் அவருக்கு எதிரானது மட்டுமல்ல, இந்தியாவில் உள்ள ஒவ்வொரு பெண்ணிற்கும் எதிரானது என்று குறிப்பிட்டுள்ளார்.

நமது கலாச்சாரத்தில் அன்னையருக்கு உயர்ந்த மதிப்பளிக்கப்படும் சூழலில், பீஹாரில் மேற்கொள்ளப்பட்ட இந்த விமர்சனம் மிகவும் துரதிருஷ்டவசமானது என்றும் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

<<<<>>>>

இரண்டு தொகுதிகளில் வாக்காளர் பட்டியலில் பெயர் பதிவு செய்திருப்பது குறித்து, காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் திரு.பவன் கேராவுக்கு, தேர்தல் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

இம்மாதம் 8-ந் தேதி காலை 11 மணிக்குள் பதிலளிக்குமாறு, புதுதில்லி சட்டப்பேரவைத் தொகுதி வாக்காளர் பதிவு அதிகாரி, அந்த நோட்டீஸில் அறிவுறுத்தியுள்ளார்.

திரு.பவன் கேரா-வின் பெயர், புதுதில்லி மற்றும் ஜங்க்புரா ஆகிய இரண்டு தொகுதிகளிலும், வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருப்பதோடு, தனித்தனி வாக்காளர் அடையாள அட்டைகளும் வைத்திருப்பதாக குற்றச்சாட்டு எழுந்த நிலையில், தேர்தல் ஆணையம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

<<<<>>>>

கனமழை மற்றும் வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்டுள்ள பஞ்சாப் மற்றும் ஜம்மு-கஷ்மீருக்கு தலா 5 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்று ஹரியானா மாநில அரசு அறிவித்துள்ளது.

இந்த நிதியுதவி பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குவதற்கு உதவிகரமாக இருக்கும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. நயாப் சிங் சைனி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

இந்தியா Med Tech Expo எனப்படும் மருத்துவ தொழில்நுட்பக் கண்காட்சி, இரண்டாம் முறையாக புதுதில்லியில் நடத்தப்பட உள்ளது.

இதுகுறித்து, புதுதில்லியில் செய்தியாளர்களை சந்தித்த மருத்துவ சாதன ஏற்றுமதி அபிவிருத்தி கவுன்சிலின் செயல் இயக்குனர் திரு.பிரவீன் குமார் மிட்டல், நாளை தொடங்கி மூன்று நாட்கள் நடைபெறும் இந்தக் கண்காட்சியில், சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், புத்தொழில் நிறுவனங்கள், ஆராய்ச்சி அமைப்புகள் மற்றும் அரசுத் துறைகளின் அரங்குகள் இடம்பெறும் என்றார்.

30 நாடுகளைச் சேர்ந்த 150 சர்வதேச மருத்துவ சாதன கொள்முதல் நிறுவனங்களும் இக்கண்காட்சியில் பங்கேற்க இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

வேகமாக வளர்ந்து வரும் இந்திய மருத்துவத் தொழில்நுட்ப சூழலை, உலக நாடுகளுக்கு எடுத்துரைத்து முதலீடுகளை ஈர்க்கவும், ஒத்துழைப்புகளை மேற்கொள்ளவும், இந்தக் கண்காட்சி உதவிகரமாக அமையும் என்றும் திரு.பிரவீன் குமார் மிட்டல் தெரிவித்தார்.

<<<<>>>>

பாகிஸ்தானின் கைபர் பக்துன்க்வா மாகாணத்தில், துணை ராணுவப்படை தலைமையகம் மீது தாக்குதல் நடத்திய ஐந்து தீவிரவாதிகள், பாதுகாப்புப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

வெடிகுண்டுகள் நிரப்பிய காரை ஓட்டிவந்த தற்கொலைப்படை தீவிரவாதி, வடக்கு வஸிரிஸ்தான் - ஆப்கானிஸ்தான் எல்லையை ஒட்டிய பன்னு மாவட்டத்தில் உள்ள துணை ராணுவப் படை அலுவலகம் மீது, காரை மோதி இந்த தாக்குதலை நடத்தியுள்ளார்.

இதையடுத்து, இரு தரப்பினருக்குமிடையே நடைபெற்ற கடும் துப்பாக்கிச் சண்டையில், காவல் துறையினர் 6 பேர் காயமடைந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

அங்கன்வாடி மையங்களை பள்ளிக்கூடங்களுக்கு அருகிலேயே அமைப்பதற்கான புதிய வழிகாட்டு நெறிமுறைகள் இன்று வெளியிடப்படும் என்று மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பல்வேறு ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் வாயிலாக, குழந்தைப் பருவத்தின் தொடக்க காலம் மற்றும் கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் விதமாக இந்த வழிகாட்டு நெறிமுறைகள் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் 2 லட்சத்து 90 ஆயிரத்திற்கும் அதிகமான அங்கன்வாடி மையங்கள், ஏற்கனவே பள்ளிக்கூடங்களுக்கு அருகிலேயே அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த வழிகாட்டி நெறிமுறை மூலம், அங்கன்வாடி மையங்களை எந்த வகையில் அமைத்தால், அவை திறம்பட செயல்படும் என்பதை மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகள், தீர்மாணிக்க முடியும் என்றும் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ப்ரோ கபடி லீக் போட்டியில் தில்லி மற்றும் ஜெய்ப்பூர் அணிகள் வெற்றி பெற்றுள்ளன.

விசாகப்பட்டினத்தில் நேற்று நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் தில்லி அணி 41-34 என்ற புள்ளிக் கணக்கில் பெங்களூரு அணியை வென்றது.

மற்றொரு ஆட்டத்தில் ஜெய்ப்பூர் அணி 39-36 என்ற புள்ளிக் கணக்கில் பட்னா அணியை வென்றது.

இன்றிரவு 8 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் ஹரியானா - மும்பை அணியையும், 9 மணிக்கு நடைபெறும் மற்றொரு ஆட்டத்தில் புனே - பெங்கால் அணியையும் எதிர்கொள்கின்றன.

<<<<>>>>

FIDE Grand Swiss செஸ் போட்டி உஸ்பெகிஸ்தானின் சமர்கண்டில் இன்று தொடங்குகிறது.

இம்மாதம் 15ஆம் தேதி வரை நடைபெறும் இப்போட்டியின் ஓபன் பிரிவில் இந்தியாவின் பிரக்ஞானந்தா, D. குகேஷ், அர்ஜுன் எரிகைசி, விதித் குஜராத்தி, திவ்யா தேஷ்முக் உள்ளிட்ட வீரர், வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

மகளிர் பிரிவில் நடப்புச் சாம்பியனான வைஷாலி ரமேஷ்பாபு, வந்திகா அகர்வால் உள்ளிட்டோர் கலந்துகொள்கின்றனர்.

<<<<The End>>>>